**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 154** **நாள்: 16.09.2024**

**இன்று (16.09.2024) மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், புரசைவாக்கம், சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சமுதாய கல்லூரியில் மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மகளிர் முன்னேற்றத்திற்கான தொழில் பயிற்சியான தையல் மற்றும் கணினிப் பயிற்சியினை தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.**

இன்று (16.09.2024) மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், புரசைவாக்கம், சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சமுதாய கல்லூரியில் மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மகளிர் முன்னேற்றத்திற்கான தொழில் பயிற்சியான தையல் மற்றும் கணினிப் பயிற்சியினை தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

முதற்கட்டமாக புரசைவாக்கத்தில் உள்ள சுந்தரம் தெருவில் இயங்கி வரும் சமுதாய வல்லூரியில் 200 மகளிருக்கான தையல், ஆரி எம்பிராய்டரி பயிற்சியும், 75 மகளிருக்கு கணினி பயிற்சி, அழகு கலை பயிற்சியும் துவங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக ஆழ்வார்பேட்டை சென்னை மேல்நிலைப் பள்ளியில் தொழிற் பயிற்சிக்கான பயிற்சி பெறுபவரின் (மகளிர்) சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இந்த சமுதாயக் கல்லூரிகளில் பயிற்சி 3 மாதம் முடிந்தவுடன் அனைத்து பெண்களுக்கும் பயிற்சி சான்றிதழும், உதவித்தொகை தலா ரூ.1,000/- வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந.இராமலிங்கம், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார்.இ.ஆ.ப., அண்ணாநகர் மண்டலக் குழுத் தலைவர் திரு. கூ.பி ஜெயின், மாமன்ற உறுப்பினர் திரு.பரிதி இளம்சுருதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**